


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் உயர்கல்வி பயிலும் 100 மாணவர்களுக்கு DBS வங்கியின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 25 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 5 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் DBS வங்கியின் தலைமை நிர்வாக இயக்குநர் பரத் மணி, வர்த்தக வங்கி பிரிவு தலைவர் சுஷந்த் ஷெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.7.2023) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 358 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3,010 குடியிருப்புகளை திறந்து வைத்து, இக்குடியிருப்பிற்கான 902 பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணைகளையும், வீடுகளுக்கான சாவிகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ. சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### அமலாக்கத்துறை தலைமை அதிகாரி - 3ஆம் முறையாக பதவி நீடிப்பு ரத்து!

# ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் சரியான குட்டு!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூலை 13- வணிகர்கள்மீது குற்றங்களை மாநில அரசே விசாரித்து வந்த நிலையில், இனி ஒன்றிய அரசின் அமலாக்கத் துறையே விசாரிக்கும் என்ற ஒன்றிய அரசின் முடிவுக்கு தமிழ்நாடு அரசின் அமைச்சர் தங்கம் தென்னரசு டில்லியில் நடைபெற்ற கூட்டத்திலேயே எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். ஒரே கல்லால் இரண்டு காய்களை அடிப்பதுபோல, மாநில உரிமைகளைப் பறித்தல், வணிகர்களை மிரட்டல் என்ற யுக்தியைப் பயன்படுத்தும் ஒன்றிய பி.ஜே.பி. அரசைக் கண்டித்து திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

உச்சநீதிமன்றத்தின் நேற்று முன்தினம் (11.7.2023) தீர்ப்பு ஒன்று மிக முக்கியமான ஜனநாயகப் பாதுகாப்பை அடிநாதமாகக் கொண்டதாகும்.

**எதேச்சதிகாரத்தின்மீது விழுந்த குட்டு!**

உச்சநீதிமன்றம், அமலாக்கத் துறையின் தலைமை அதிகாரிக்கு, பிரதமர் மோடி தலைமையிலான ஆர்.எஸ்.எஸ். அரசு சிறிதும் கூச்சநாச்ச மின்றி மூன்றாவது முறையாக பதவி நீடிப்பு (One year extension) கொடுக்கும் அந்த ஒன்றிய அரசின் ஆணை செல்லாது; அவர் 31.7.2023 வரைதான் பதவியில் நீடிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது! ஒன்றிய அரசின் எதேச்சதிகாரத்தின்மீது விழுந்த சரியான குட்டு ஆகும் இது!

எதற்கெடுத்தாலும் எதிர்க்கட்சித் தலைவர்கள் அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தி அடி பணிய வைக்க ஒரு மின்னல் வேகத் தாக்குதல் செய்து பாய வைக்கும் (பிளிட்ஸ்கிர்க் என்று இரண்டாம் உலகப் போரில் ஒரு தாக்குதல் முறை உள்ளதை நினைவூட்டும் வகையில்) ஆயுதமாகவே அமலாக்கத் துறை பயன்படுத்தப்பட்டு வருவது பாரறிந்த செய்தியாகும்.

**ஒன்றிய அரசு பயன்படுத்தும் திரிசூலங்கள்!**

தேர்தல் ஆணையம், சி.பி.அய்., வருமான வரித் துறை போன்ற முக்கியத் துறைகள் திரிசூலங்களாகவே, அரசியல் எதிரிகள்மீது பாய்வதும், அவர்கள் அக்கட்சிகளை விட்டு வெளியேறி ஆளும் பா.ஜ.க. கூட்டணிக்கு மாறிவிட்டால் நடவடிக்கைகள் காணாமற்போவதும் கண்கூடாக நடப்பது அல்லவா?

மூன்றாவது முறையாக இந்த மிஸ்ரா என்பவருக்கு (உயர்ஜாதி பார்ப்பனருக்கு) பதவி நீடிப்பு அதுவும் உச்சநீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பினை மதிக்காமல், அதற்கு எதிராகவே தரப்பட்டுள்ளது!

இதனையே உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டி, இப்படி ஓர் அதிரடித் தீர்ப்பை வெளியிட்டுள்ளது!

**குறைந்த அளவு அரசு நிறைந்த அரசு ஆளுமை என்பது இதுதானோ?**

இதற்கு சில மாதங்களுக்கு முன்பு தேர்தல் ஆணைய உறுப்பினருக்கு 7 ஆவது முறை தீர்ந்து, 8 ஆவது முறை பதவி நீடிப்பு என்பதாக ஒன்றிய மோடி அரசு பதவி நியமனத்தை நீட்டி குறிப்பிட்டவருக்குத் தந்தபோது, நீதிபதிகள், "அவர் என்ன அவ்வளவு இன்றியமையாதவரா? ஏன் ஒருவருக்கே இத்தனை முறை தொடர் பதவி நீடிப்புகள்?" என்று சுட்டிக்காட்டி, கண்டித்துக் கூறவில்லையா? "அவர் இல்லையானால் அந்த அமைப்பே இயங்காதா?" என்று சொடுக்கிக் கேட்டனர்!

பல அதிகாரிகள் பிரதமர் மோடி அவர்கள் குஜராத்தில் முதலமைச்சராக இருந்தபோது, அவருடன் இருந்த அதிகாரிகளான, அவர்களையே, ஆங்காங்கு நியமனப்படுத்துகிறார்கள்; குறிப்பிட்ட அந்த அதிகாரி வேறு ஒரு பதவியிலிருந்து உடனே அதில் இராஜினாமா; அதை உடனடியாக ஒப்புக்கொண்டு, உடனே புதிய பதவி நியமனம் இப்படி பல 'திருக்கூத்துகள்!'

அவர் பிரதமர் பதவி யேற்க (2014 இல்) முதல் முறைவந்தபோது கூறியது, "குறைந்த அளவு அரசாங்கம், நிறைந்த அரசு ஆளுமை', ('Minimum Government Maximum Governance') என்று வாக்குறுதி கொடுத்தாரே, அது இதுதானா?

**ஒன்றிய நிதியமைச்சர் அறிவிப்பு தமிழ்நாடு அமைச்சர் தங்கம் தென்னரசு எதிர்ப்பு!**

மற்றொரு அதிர்ச்சிக்குரிய செய்தி, நேற்று முன்தினம் (11.7.2023) டில்லியில் நடைபெற்ற 50 ஆவது ஜி.எஸ்.டி. கலந்தாய்வுக் கூட்டத்தில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், "வணிகர்கள் மீதான குற்ற வழக்குகள் மாநில அரசு சட்டங்கள்கீழ் பதிவு செய்து விசாரணைக்கு வருவதை இனி ஒன்றிய அரசின் அமலாக்கத் துறை விசாரணையின்கீழ் வரும் பண மோசடி சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறையே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் வகையில், இது மாற்றப்படுகிறது'' என்று அறிவித்துள்ளதை தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் அக்கூட்டத்திலேயே அதனை எதிர்த்து, "இது ஏற்கத்தக்கதல்ல; தமிழ்நாட்டு சிறு வணிகர்கள் மிகவும் தொல்லைக்குட்படுத்தப்பட்டு அவதிப்படுத்திடும் ஆபத்து உள்ளது'' என்பதைக் கூறி, கண்டித்து ஒப்புக்கொள்ள மறுத்துள்ளார்!

**ஜி.எஸ்.டி. வரியை எதிர்த்த குஜராத் முதலமைச்சர்தானே நரேந்திர மோடி!**

பல வழக்குகள் அமலாக்கத் துறையின் அதீத நடவடிக்கைகள் உயர்நீதிமன்றங்களில், உச்சநீதிமன்றத்தில் வழக்காக உள்ள நிலையில், இனி வணிகர்களும் அந்த வட்டத்தின்கீழ் கொண்டு வரப்படுவது மோடி அரசின் 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்' மாநில உரிமையையும் பறித்தல், வணிகர்களையும் மிரட்டல் வளையத்திற்குள் கொணர்வது என்ற நடவடிக்கையேயாகும்.

இது வன்மையான கண்டனத்திற்குரியது!

பிரதமர் மோடி, முன்பு குஜராத் முதலமைச்சராக இருந்தபோது அன்றைய டில்லி ஒன்றிய அரசு, ஜி.எஸ்.டி.யைக் கொண்டு வந்தபோது கடுமையாக எதிர்த்து, "இதனை அனுமதிக்கவே மாட்டேன்'' என்று முழங்கியவர் அல்லவா?

இப்போது இப்படியா? என்ன நியாயம்?

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பெயரில், மாவட்டச் செயலாளர்களின் பரிந்துரை அடிப்படையில், இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் இளைஞர் அணிக்கு புதிய நிர்வாகிகள் பட்டியலை அறிவித்தார். அதன்படி புதிதாக நியமிக்கப்பட்ட நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சேந்தமங்கலம் சி.விஸ்வநாத், துணை அமைப்பாளர்கள் நாமக்கல் எம்பரர் வ.இளம்பரிதி, பொம்பன்பட்டி இரா. பிரபாகரன், ராசிபுரம் மா.கார்த்திக், நாமகிரிப்பேட்டை ம.ரமேஷ்குமார், முத்துக்காப்பட்டி கலைவாணன், சி.ஆனந்தகுமார் ஆகியோர் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமாரை சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழை போற்றும் வகையில் பேனா சின்னத்துடன் கூடிய திருவுருவச்சிலை வழங்கி வாழ்த்துப் பெற்றனர்.

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!

# திருச்சியில் மாநில வேளாண்மை கண்காட்சி!

## ஜூலை 27 முதல் 29 வரை நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 13- கடந்த மூன்று ஆண்டுகளாக வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கையின் மூலம் பல நூறு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. 2023-24-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் நவீன தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களிடையே ஏற்படுத்தும் வகையில், 2023-24 ஆம் ஆண்டில் மாநில வேளாண் கண்காட்சி திருச்சியிலும், உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனங்கள், வாழை மலர்களுக்கான கண்காட்சி சென்னையிலும், பலாவுக்கான கண்காட்சி பண்ருட்டியிலும் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த 8.07.2023 மற்றும் 9.07.2023 ஆகிய தேதிகளில் சென்னையில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான கண்காட்சி முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. வேளாண் வணிகத் திருவிழா 2023 மிக வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் ரூபாய் 2.5 கோடி மதிப்பிலான மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை ஆகியுள்ளது. அச்சமயம், இது போன்ற கண்காட்சிகள் விவசாயிகளுக்கு பயன்பெறும் வகையில் நடத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள்.

இதன் தொடர்ச்சியாக, ஜூலை 27-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி முடிய திருச்சியில் மாநில வேளாண் கண்காட்சி (வேளாண் சங்கமம்) நடைபெறும். இதற்கான முன்னேற்பாடுகள் குறித்த கூட்டம் 10.07.2023 அன்று தலைமைச் செயலகத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விவசாயிகளுக்கு தேவைப்படும் விதைகள், தென்னங்கன்றுகள் மற்றும் பழமரக்கன்றுகள் ஆகியவற்றை காட்சிப்படுத்துவதுடன், அவற்றை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் எனவும், விவசாயிகளுக்கு தேவைப்படும் அனைத்து வேளாண் இயந்திரங்களையும் காட்சிப்படுத்தி நடவடிக்கை எடுத்திட வேண்டும் எனவும், விவசாயிகளுக்கான அனைத்து திட்டங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் வகையில் கண்காட்சி அமைத்திட வேண்டும் எனவும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தங்கள் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என அறிவுறுத்தினார். அதிக அளவில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

விவசாயிகளுக்கான புதிய தொழில்நுட்பங்கள், மின்னணு விற்பனை, வேளாண் காடுகள், உயரிய தோட்டக்கலை தொழில்நுட்பம், நவீன வேளாண் இயந்திரங்கள், வேளாண் ஏற்றுமதி போன்ற தலைப்புகளில் கருத்தரங்கம் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், சிறப்புச் செயலாளர் முனைவர் இரா.நந்தகோபால், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் எஸ்.நடராஜன், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி முகமையின் செயல் இயக்குநர் (பொ) த.அன்பழகன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் மருத்துவர் ஆர்.பிருந்தாதேவி, வேளாண் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் இரா.முருகேசன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### கழக துணைப் பொதுச் செயலாளர்

# கனிமொழி கருணாநிதி எம்.பி. நிகழ்ச்சிகள்!



### அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிவிப்பு!

**13.07.2023 - வியாழக் கிழமை**

| நேரம் | நிகழ்ச்சிகள் | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | அம்ரூத் குடிநீர் திட்டப்பணிகள், 4 லட்சம் லிட்டர் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்கு அடிக்கல் நாட்டுதல். | மேலரதவீதி, தென்திருப்பேரை பேரூராட்சி |
| காலை 10.15 மணி | புதிய ரேசன்கடை திறந்துவைத்தல். | மடத்துவிளை, ஆறுமுகநேரி பேரூராட்சி |
| காலை 10.20 மணி | புதிய ரேசன்கடை திறந்துவைத்தல். | ராஜமன்யபுரம், ஆறுமுகநேரி பேரூராட்சி |
| காலை 10.30 மணி | சுத்தம் செய்யப்பட்ட பழைய குப்பைக் கிடங்கை பார்வையிடுதல். | பேரூராட்சி அலுவலகம் எதிர்புறம், ஆறுமுகநேரி |
| காலை 10.45 மணி | காயல்பட்டணம் அரசு மருத்துவமனையில் ரூ.62 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டுதல். | அரசு மருத்துவமனை, காயல்பட்டணம் நகராட்சி |
| முற்பகல் 11.00 மணி | 113 தெருச் சாலைகளை அமைக்கும் பணிகள் துவக்கிவைத்தல். | குத்துக்கல் தெரு, காயல்பட்டணம் நகராட்சி |
| முற்பகல் 11.15 மணி | 60 KV மின்மாற்றி இயக்கிவைத்தல். | L.K.மேல்நிலைப் பள்ளி அருகில், காயல்பட்டணம் நகராட்சி |
| முற்பகல் 11.30 மணி | 2350 புதிய LED தெரு விளக்குகள் அமைக்கும் பணி துவக்கிவைத்தல், 13 பேட்டரி கார்கள், புதிய TATA ACE வாகனம் வழங்குதல் மற்றும் இதர திட்டப் பணிகள் துவக்கிவைத்தல். | புதிய பேருந்து நிலையம், காயல்பட்டணம் நகராட்சி |

**மாலை நிகழ்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| மாலை 4.15 மணி | பேருந்து நிறுத்த பயணிகள் நிழற்குடை திறந்துவைத்தல். | குமாரபுரம், திருச்செந்தூர் நகராட்சி |
| மாலை 4.30 மணி | மக்கள் களம் நிகழ்ச்சி<br>வாகவிளையில் 60 ஆயிரம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி,<br>வேப்பங்காட்டில் 30 ஆயிரம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அடிக்கல் நாட்டுதல். | வேப்பங்காடு, லெட்சுமிபுரம் ஊராட்சி, உடன்குடி மேற்கு ஒன்றியம் |
| மாலை 5.30 மணி | மக்கள் களம் நிகழ்ச்சி<br>புதிய ரேசன்கடை கட்டிடம், புதிய அங்கன்வாடி கட்டிடம் அடிக்கல் நாட்டுதல். | நயினார்பத்து ஊராட்சி, உடன்குடி கிழக்கு ஒன்றியம் |
| மாலை 6.30 மணி | மக்கள் களம் நிகழ்ச்சி | சீர்காட்சி ஊராட்சி, உடன்குடி கிழக்கு ஒன்றியம் |

**அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன்**
செயலாளர்
தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க.